# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***
***SESSIONS CASE NO. 495/2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.19**

| | | |
|---|---|---|
| பெயர் | – | கார்த்திகேயன் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 15th day of April 2025.**

(Accused produced on P.T. warrant through V.C.)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அசோக்நகர் காவல்நிலைய பொருளாதார குற்றப் பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தாழையூத்து காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 01.07.2022ம் தேதி 15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நாரணம்மாள்புரம் பகுதி 1 கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்முருகன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப தாழையூத்து காவல்நிலைய குற்ற எண். 164/2022 சட்டப் பிரிவு 174 Crpc (Suspicious death) ஆக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.23. புகார்மனுவையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட

உயரதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.பத்மநாபபிள்ளை அவர்கள் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக தாழையூத்து காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

கிராம நிர்வாக அலுவலர் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் அறிவேன் சாட்சியாக யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் 15வது காலத்தில் அது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நேரம் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் இருந்து நீதித்துறை நடுவரின் குடியிருப்பிற்கு 1 மணி நேரத்திற்குள் சென்றுவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அது 02.7.2022 அன்று 11.20 மணிக்கு நீதித்துறை நடுவரின் குடியிருப்பில் பெறப்பட்டதாக மேல்குறிப்பு உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் புகார் மனு கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை